| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>தங்கராசு | அ.வ.எண். 117/2016 | 07.03.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1ம் பிரதிவாதியின் பாட்டனார் சொத்து வாங்கியது சம்மந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 1ம் பிரதிவாதி வாங்கிய ஆவணங்களை தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண்.59/10 மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 6 சென்ட் ஆகும். வழக்கு சொத்தின் சோலார் மின் சக்தி பெறுவதற்கு சோலார் போடப்பட்டுள்ளதா என்றால் என் இடத்தில் போடவில்லை. என் இடம் தரிசு நிலம் உள்ளது. என் பெயருக்கு என் நிலம் என்று காட்டுவதற்கு பத்திரம் எதுவும் இல்லை. தாத்தா வழியில் வந்த பூர்வீக சொத்தாகும். எனது பாட்டனார் பெயரில் அடங்கல் மற்றும் சிட்டா எதுவும் இல்லை. நான் எனது பாட்டனார் பெயரில் சாகுபடி செய்ததற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். அது தரிசு நிலமாகும். மழை பெய்தால் புஞ்சை சாகுபடி நடக்கும். வழக்கு சொத்தில் மோட்டார், அடிபம்பு இல்லை. எனது தாயார் இறந்து 10 வருடங்கள் இருக்கும். 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதற்கு 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மூன்று முறை கேவியட் மனு 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளனா என்றால் மனு தாக்கல் செய்தோம் எத்தனை முறை என்னு ஞாபகம் இல்லை. 3 ஏக்கர் 6 சென்ட் நிலம் ஒரே தாக்காக உள்ளது. வழக்கு சொத்தில் வீடு உள்ளதா என்றால் இல்லை. அவர் சொத்தில் உள்ளது அதன் சர்வே எண் அவருக்கு தான் தெரியும். அதற்கு வீட்டு வரி நான் கட்டவில்லை. வழக்கு சொத்து எனது பெயரில் இருக்கிறது என்பதை காட்ட அடங்கல், சிட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை.

எங்களது இடத்தில் 1ம் பிரதிவாதி மின் இணைப்பு பெற்றுவிடுவார் என்பதற்காக 3 முதல் 6 பிரதிவாதிகளிடம் தடை கேட்டு மனு செய்தேன். ஆனால் எங்கள் இடத்தில் மின்சாரம் எதுவும் இல்லை. வழக்கு சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தகப்பனார் சொத்து தான் எனக்கு சொந்தம் என நான் கேட்டுள்ளேன். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் அதில் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனது அம்மா, அப்பா, தாத்தா, அனைவரும் இறந்துவிட்டனர். ஒரு சகோதரி மல்லிகா உள்ளார். எனது சகோதரி மல்லிகாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. 7 முதல் 9 பிரதிவாதிகளை இந்த வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்தேன் என்றால் எங்களுக்கு உரிமை வயது அடைந்துவிட்டதாலும், எங்களை கேட்காமல் எங்கள் கையொப்பத்தை பெறாமல் பிரதிவாதி நிலத்தை வாங்கிவிட்டதால் மேற்படி நபர்களை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு விற்றது செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் 05.11.1978 ல் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தார். மேற்படி கிரையத்தை ரத்து செய்ய நான் எந்த பரிகாரமும் கோரவில்லை. நானும், எனது சகோதரியின் வாரிசுகளும் வழக்கு சொத்தை பொருத்து 05.11.1978 ல் வில்லங்கம் பெற்று பார்த்த போது தான் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும். 1978 லிருந்து 3 வருட காலத்திற்குள் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. எனது கையொப்பம் பெறாமல் நிலத்தை கிரையம் பெற்றது செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேன்.

நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்பதை தெரியாமலேயே சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 14.03.2024 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.